திருவாரூரில் புதிதாகத் திறக்கப்பட்ட கலைஞர் கோட்டத்தை பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் வரிசையில் நின்று கண்டு மகிழ்ந்தனர்.

அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய வழக்கு:

அமலாக்கத் துறையின் கோரிக்கை அனைத்தும் நிராகரிப்பு!

உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெலில், ஜூன் 23 -

அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து அமலாக்கத்துறை உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. செந்தில் பாலாஜியின் மனைவியும் உச்சநீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்தார். இந்நிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் சூர்ய காந்த், எம்.எம். சுந்தரேஷ் அமர்வு முன் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, அமலாக்கத்துறை வழக்கறிஞர் ஆஜராகி தனது வாதங்களை முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செந்தில் பாலாஜியின் மனைவி மேகலா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், செந்தில் பாலாஜியின் இதயத்தில் 4 அடைப்புகள் உள்ள நிலையில் மருத்துவ அறிக்கை மீது அமலாக்கத்துறை சந்தேகம் எழுப்பியதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவரை எப்படி காவலில் எடுத்து விசாரிக்க முடியும் என அமலாக்கத்துறைக்கு நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். உயர்நீதிமன்றம் அனுமதி

அளித்துள்ளதால், அமலாக்கத்துறை ஒரு மருத்துவக் குழு அமைத்து செந்தில் பாலாஜி உடல்நிலை எப்படி உள்ளது என்பதை அறியலாம் எனவும் நீதிபதிகள் கூறினர்.

மேலும், ஆட்கொணர்வு மனு மீது உயர்நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது சரியானது என்றும், அதன் உத்தரவில் சந்தேகப்படுவதற்கு எந்த காரணமும் இல்லை என்றும் தெரிவித்த நீதிபதிகள், அமைச்சர் செந்தில் பாலாஜியை தனியார் மருத்துவமனைக்கு மாற்றிய உயர்நீதிமன்ற உத்தரவுக்கு தடை விதிக்குமாறு அமலாக்கத்துறை விடுத்த கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதிகள், அமலாக்கத்துறையின் செயலுக்கு தங்கள் அதிருப்தியை தெரிவித்தனர்.

மேலும், இந்த வழக்கை உயர் நீதிமன்றம் தொடர்ந்து விசாரித்து வருவதால் இதில் உச்சநீதிமன்றம் தலையிடுவது குறித்து பின்னர் முடிவு செய்யலாம் என்றும் தெரிவித்த நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூலை 4ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மகிழ்ச்சி - மனநிறைவு - பெருமிதம்!

தேரோட்டம் நடக்கும் நாளில் மட்டும்தான் திருவாரூர் தெருக்கள் எல்லாம் மக்கள் கூட்டத்தால் நிறைந்திருக்கும். வாகனங்கள் பரபரக்கும். அதைத் தவிர மற்ற நாட்களில் அமைதி உறைந்திருக்கும். ஏறத்தாழ 40 ஆண்டுகள் ஓடாமல் இருந்த ஆழித் தேரை மீண்டும் ஓடச் செய்து திருவாரூருக்கு பெருமை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

அதே திருவாரூரில் கலைஞருக்குத் தேர் வடிவில் கோட்டம் அமைத்து திறந்திருக்கிறார் கழகத் தலைவர். இரண்டு நாட்களாக திருவாரூர் முழுவதும் தேரோட்டம் நடப்பது போன்ற நிலை. கருப்பு சிவப்பு கொடி பறக்கும் வாகனங்கள், கரை வேட்டி கட்டிய உடன்பிறப்புகள், Tshirt இளைஞரணியினர்.

தங்களின் திருத்தலத்திற்கு வருவது போன்ற உணர்வுடன் ஆயிரமாயிரமாய் வருகை தந்த ஆண் பெண் தொண்டர்கள். கும்பகோணம், தஞ்சாவூர், மன்னார்குடி, மயிலாடுதுறை, திருத்துறைப்பூண்டி சாலைகளில் எல்லாம் மக்கள் வெள்ளம்.

ஒரு நாளுடன் முடியாமல் ஒவ்வொரு நாளும் மக்கள் வரும் வகையில் கலைஞர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

திருவாரூரில் கலைஞர் என்றென்றும் வாழ்கிறார் என்ற உணர்வை ஊட்டியிருக்கிறார் கழகத் தலைவர் முதலமைச்சர்.

ஊர்க்காரனாக ஒரு கோடி நன்றி.

கோவி.லெனின்

டி.ஆர்.பி.ராஜா கோரிக்கையை ஏற்று முதல்வர் மு.க. ஸ்டாலின் நடவடிக்கை!

ஹரித்ரா நதி தெப்பக்குளத்தில் படகு இல்லம் அமைக்கும் பணி!

மன்னார்குடியில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

மன்னார்குடி, ஜூன் 23-

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை அலையாத்தி காடுகள் (லகூன்) மற்றும் மன்னார்குடி ஹரித்ரா நதி தெப்பக்குளத்தில் படகு இல்லம் அமைக்கும் பணி குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். எம்.செல்வராஜ் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகரமன்ற தலைவர் மன்னி த.சோழராஜன், நகரச் செயலாளர் வீரா கணேசன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மின்னும் மன்னை திட்டத்தின் கீழ் மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு வளர்ச்சித்திட்ட பணிகளை மேற்கொண்டுவரும் சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜாவின் சீரிய முயற்சிகளால் ஒருங்கிணைந்த புதிய பிரமாண்ட பேருந்து நிலையம், அனைத்து வசதிகளுடனான அரசு தலைமை மருத்துவமனை, நூலகம் வரிசையில் ஹரித்ரா நதியில் படகு இல்லம் அமைக்கும்பணி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி துவங்கி உள்ளது. சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் இந்த பணிகளுக்காக ஹரித்ரா நதியில் அரசு அலுவலர்களுடன் ஆய்வுகள் மேற்கொண்டார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழத்தினை 1971ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சரின் சீரிய முயற்சிகளால் உணவகங்கள், தங்கும் விடுதிகள் புதுப்பிக்கப்பட்டு, புதுப் பொலிவு பெற்றதன் காரணமாக விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியா விலேயே சுற்றுலாத்துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 29 ஓட்டல்கள் நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தளங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் பொது மக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் செயல்பட்டுவருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றன. மேலும், திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டுவரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு என பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில் சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டல், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டார் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்புப் படகுகள், வாட்டர் சைக்கிள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2023ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 13,11,157 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டு நீங்காத அனுபவங்களை பெற்றனர். இவற்றில் மலைப்பகுதி சுற்றுலா தலங்களான ஊட்டியில் 6,81,149 சுற்றுலா பயணிகளும், கொடைக்கானலில் 2,29,840 சுற்றுலா பயணிகளும், ஏற்காட்டில் 1,57,753 சுற்றுலா பயணிகளும் படகு பயணம் மேற்கொண்டனர். குறிப்பாக 2022ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 10,21,039 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டனர். இவற்றில் மலைப்பகுதி சுற்றுலா தலங்களான ஊட்டியில் 5,40,009 சுற்றுலா பயணிகளும், கொடைக்கானலில் 1,55,542 சுற்றுலா பயணிகளும், ஏற்காட்டில் 1,42,139 சுற்றுலா பயணிகளும், படகு பயணம் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முதல்வர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் மட்டும் 4,42,337 ஆக உயர்ந்துள்ளது. இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021ல் 11,53,36,719 ஆக இருந்து 2022ல் 21,85,84,846 ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் 12,21,38,238 என உயர்ந்துள்ளது.

குறிப்பாக ஏப்ரல், மே ஆகிய 2 மாதங்களில் மட்டும் 1,74,564 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 5,56,48,084 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஹரித்திரா நதி தெப்ப குளத்தில் படகு இல்லம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி.ராஜா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வைத்த கோரிக்கையை ஏற்று அதற்கான பணியினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு ஆய்வுகள் மேற்கொண்டார்.

திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் புதன்கிழமை நடைபெற்ற அனைத்து அரசு துறைகளின் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப்குமார் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பல்வேறு திட்டப் பணிகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திட்டப் பணிகளைத் தொய்வின்றி விரைவாக மேற்கொள்ள உயர் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். நிகழ்வில் மாநகர காவல் ஆணையர் எம்.சத்தியப்பிரியா, மாநகராட்சிஆணையர் இரா.வைத்திநாதன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சுஜித்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.இனிகோ இருதயராஜ், பி.அப்துல் சமது மற்றும் அனைத்துத் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு இருதய அறுவை சிகிச்சை நிறைவு!

உடல்நிலை சீராக உள்ளது - காவேரி மருத்துவமனை தகவல்!

சென்னை, ஜூன் 23-

அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு காவேரி மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்தது. அவரது உடல்நிலை சீராக உள்ளதாக காவேரி மருத்துவமனை அறிவித்துள்ளது.

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்து 17 மணி நேரம் தொடர் விசாரணை நடத்தியதில், அவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார். பின்னர், மருத்துவர்கள் நடத்திய சோதனைகளில் அவரது இதயத்தில் அடைப்புகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமைச்சர் செந்தில் பாலாஜியின் மனைவி மேகலா தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், அமைச்சர் செந்தில் பாலாஜியை சென்னை காவேரி மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்கும்படி உத்தரவிட்டது.

இந்நிலையில், அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் தொடங்கிய பைபாஸ் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது. மருத்துவர் ரகுராமன் தலைமையிலான மருத்துவக்குழு அவருக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டனர்.

இந்நிலையில் காவேரி மருத்துவமனை வெளியிட்டுள்ள அறிக்கையில், அமைச்சர் செந்தில் பாலாஜியின் இதயத்தில் இருந்த 4 அடைப்புகள் அகற்றப்பட்டதாகவும், அவரது உடல் நிலை சீராக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு

பொதுப்பணித்துறை கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்

மொத்த விலை (இனவிலை முறை)

மின்னனு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.05 / BCM / CBE / 2023-24 / நாள்.19.06.2023

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர், பொது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால் **(1.) கோயம்புத்தூர் மாவட்டம், கண்ணம்பாளையம் அரசு மேல்நிலை பள்ளிக்கு 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சுற்றுசுவர் கட்டுதல் பணி (இரண்டாம் அழைப்பு) மற்றும் (2.) திருப்பூர் மாவட்டம், உடுமலைபேட்டை வட்டம், பண்ணைகினறு கிராமத்தில் உள்ள கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நீறுவனத்தை நீறுவ கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல் பணிகளுக்கு** இணையவழி முறையில் பெறப்பட்ட இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளிகள் அரசு மின்னனு கொள்முதல் வலைதளத்தில் (e-procurement portal of Government of TamilNadu) ல் 12.07.2023 பிற்பகல் 3.00 மணி வரை பதிவேற்றம் பெற்று அன்றே பிற்பகல் 4.00 மணி முதல் திறக்கப்படும்.

இதர அனைத்து விவரங்களும் http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

செ.ம.எதா.இ / 3169 / ஒப்பந்தப்புள்ளி /2023

சிறப்பு தலைமைப் பொறியாளர், பொபது கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் - 641001.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"

ஆண்டியும் போண்டியும்

ஆண்டி : ஏன்ய்யா; பா.ஜ.க.வுக்கு ஒருமுறை வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள் என்று ராணுவ அமைச்சர் ராஜ்நாத்சிங் சொல்லி இருக்காரே?

போண்டி : ஆமாய்யா; மணிப்பூர்ல தீ எரியுற மாதிரி இங்கயும் பார்க்கவா?